வகுப்பு : ஆறு

நவம்பர் மாதப்பாடப்பகுதி

இயல் : 6

செய்யுள் -(i) பாரதம் அன்றைய நாற்றங்கால்

செய்யுள்(ii) பாஞ்சை வளம்

உரைநடை : தமிழ்நாட்டில் காந்தி

துணைப்பாடம் : வேலுநாச்சியார்

இலக்கணம் : சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள்

கடிதம் : பிறந்தநாள் விழாவிற்கு நண்பனை அழைத்தல்

Scanned with OKEN Scanner

# இயல் - 6

## செய்யுள் - பாரதம் அன்றைய நாற்றங்கால்

### I குறுவினா:

1. தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

தாராபாரதியின் பாடலில் இடம்பெற்றுள்ள கவிஞர்களின் பெயர்கள்:

* திருவள்ளுவர்
* காளிதாசன்
* கம்பர்

2. இந்தியாவின் மேற்கு, கிழக்கு ஆகிய திசைகளை இணைத்துக் கவிஞர் காட்டும் காட்சியை எழுதுக.

இந்தியாவின் மேற்கே தோன்றும் நதிகள் கிழக்கு எல்லை வரை பாய்ந்து நன்மைகளை விளைவிக்கின்றன.

---

புத்தகப் பயிற்சி: பக்க எண் 108-ஐ படிக்க வைத்தல்

# செய்யுள் - பாஞ்சை வளம்

## I குறுவினா:

1. பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டைகள் பற்றிக் கூறுக.

பாஞ்சாலங்குறிச்சியில் பல சுற்றுகளாகக் கோட்டைகள் இருந்தன. அவை மதில்களால் சூழப்பட்டவையாகவும் மிகவும் வலிமையானதாகவும் கட்டப்பட்டிருந்தன.

2. பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளம் எத்தகையது?

பூஞ்சோலைகளும், சந்தனமரச் சோலைகளும், ஆறுகளும், நெல் வயல்களும், பாக்குத் தோப்புகளும் பாஞ்சாலங்குறிச்சியின் இயற்கை வளங்களாகத் திகழ்கின்றன.

## II சிறுவினா:

புத்தகத்தைப் பார்த்து படிக்க வைத்தல்.

## III புத்தகப்பயிற்சி:

பக்க எண் 112-ஐ படிக்க வைத்தல்

# உரைநடை

## தமிழ்நாட்டில் காந்தி

I குறுவினா :

1. காந்தியடிகள் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் முதலில் ஏன் நுழையவில்லை ?

மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் செல்ல எல்லா மக்களுக்கும் அனுமதி இல்லை என்பதால் காந்தியடிகள் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் முதலில் நுழையவில்லை.

2. காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.

* 1937-ஆம் ஆண்டு சென்னையில் இலக்கிய மாநாடு ஒன்று நடைபெற்றது.
* அம்மாநாட்டுக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார்.
* உ.வே.சாமிநாதர் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்தார்.
* உ.வே.சாமிநாதரின் உரையைக் கேட்ட காந்தியடிகள் மகிழ்ந்தார்.
* "இந்தப் பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது" என்று கூறினார் காந்தியடிகள்.

II சிறுவினா : புத்தகத்தைப் பார்த்து படிக்க வைத்தல்.

III புத்தகப் பயிற்சி : பக்க எண் 116-ஐ படிக்க வைத்தல்.

## துணைப்பாடம்

## வேலுநாச்சியார்

I. வினா - விடை :

1. வேலுநாச்சியார் குறிப்பு வரைக?

* இராமநாதபுரத்தை ஆட்சி செய்த செல்லமுத்து மன்னரின் ஒரே மகள் வேலுநாச்சியார்.

* தாய்மொழியாகிய தமிழ் மட்டும் அல்லாமல் ஆங்கிலம், பிரெஞ்சு, உருது ஆகிய மொழிகளையும் சிறப்பாகக் கற்றார்.

* சிலம்பம், குதிரை ஏற்றம், வாள்போர், விற்பயிற்சி ஆகியவற்றையும் முறையாகக் கற்றுக் கொண்டார்.

* வேலுநாச்சியார் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதரை மணந்தார்.

2. ஆண்கள் படைப்பிரிவுக்கு தலைமை ஏற்றவர் யார்?

ஆண்கள் படைப்பிரிவுக்குத் தலைமை ஏற்றவர்கள் மருது சகோதரர்கள்

3. பெண்கள் படைப்பிரிவுக்கு தலைமை ஏற்றவர் யார்?

படைப்பிரிவுக்கு தலைமை ஏற்றவர் பெண்கள் குயிலி.

4. ஆங்கிலேயர்கள் வேலுநாச்சியாரை காட்டிக் கொடுக்கும்படி யாரை வற்புறுத்தினார்கள்?

ஆங்கிலேயர்கள் வேலுநாச்சியாரை காட்டிக் கொடுக்கும்படி உடையாள் என்னும் பெண்ணை வற்புறுத்தினார்கள்

5. நடுகல்லுக்கு முன் வீரர்கள் என்ன சொல்லி முழக்கமிட்டனர்?

நடுகல்லுக்கு முன் வீரர்கள் "உடையாள் புகழ் ஓங்குக!" என்று சொல்லி முழக்கமிட்டனர்.

6. சிவகங்கை எவ்வாறு மீட்கப்பட்டது?

வேலுநாச்சியாரின் வீரம், மருது சகோதரர்களின் ஆற்றல், ஐதர் அலியின் உதவி ஆகியவற்றோடு குயிலியின் தியாகமும் இணைந்ததால் சிவகங்கை மீட்கப்பட்டது.

Scanned with OKEN Scanner

# இலக்கணம்

## சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள்

நிரப்புக:

ஒன்றைச் சுட்டிக் காட்ட வரும் எழுத்துகளுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர்.

அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும்

சுட்டு எழுத்துகள் சொல்லின் உள்ளேயே இருந்து சுட்டுப்பொருளைத் தருவது அகச்சுட்டு எனப்படும்.

சுட்டு எழுத்துகள் சொல்லின் வெளியே இருந்து சுட்டுப் பொருளைத் தருவது புறச்சுட்டு எனப்படும்.

அண்மைச்சுட்டுக்குரிய எழுத்து இ ஆகும்

சேய்மைச் சுட்டுக்குரிய எழுத்து அ ஆகும்.

அ, இ ஆகிய சுட்டு எழுத்துகள் அந்த, இந்த எனத் திரிந்து சுட்டுப் பொருளைத் தருவது சுட்டுத்திரிபு எனப்படும்.

8. வினாப் பொருளைத் தரும் எழுத்துகளுக்கு வினா எழுத்துகள் என்று பெயர்.

9. எ, யா, ஆ, ஓ, ஏ ஆகிய ஐந்தும் வினா எழுத்துகள் ஆகும்

10. வினா எழுத்துகள் சொல்லின் அகத்தே இருந்து வினாப் பொருளைத் தருவது அகவினா எனப்படும்

11. வினா எழுத்துகள் சொல்லின் புறத்தே வந்து வினாப் பொருளைத் தருவது புறவினா எனப்படும்.

12. வினா அகவினா, புறவினா என இரண்டு வகைப்படும்.

Scanned with OKEN Scanner

II உதாரணம் தருக:

1. வினா எழுத்துகள் - எ, யா, ஆ, ஓ, ஏ
2. சுட்டெழுத்துகள் - அ, இ, உ
3. அகவினா - யார்?
4. புறவினா - தெரியுமோ?
5. அண்மைச்சுட்டு - இவள்
6. அகச்சுட்டு - அவன்
7. சுட்டுத்திரிபு - இந்தவீடு
8. புறச்சுட்டு - அப்பள்ளி

III கூறியவாறு செய்க:

1. மலர் (புறச்சுட்டாக்குக) - அம்மலர்
2. அவ்வூர் (சுட்டுத்திரிபாக்குக) அந்த ஊர்
3. இக்கோயில் (சேய்மைச்சுட்டாக்குக) அக்கோயில்
4. அவ் வீடு (அண்மைச்சுட்டாக்குக) இவ்வீடு
5. அவன் (புறவினாவாக்குக) - அவனா?

Scanned with OKEN Scanner

IV இலக்கணக் குறிப்பு தருக :

1. அது, இது - அகச்சுட்டு
2. அவ்வானம், இம்மலை புறச்சுட்டு
3. இம்மரம், இவ்வீடு - அண்மைச்சுட்டு
4. அம்மரம், அவ்வீடு - சேய்மைச்சுட்டு
5. அந்தமரம், இந்தமரம் - சுட்டுத்திரிபு
6. எது, யார் - அகவினா
7. பேசலாமா? வருவானா? புறவினா

அழைப்புக்கடிதம்

உன் பிறந்தநாள் விழாவிற்கு நண்பனை அழைத்து கடிதம் ஒன்றை எழுதுக.

21, காந்திநகர்,
போரூர்,
சென்னை - 600 116.

அன்புள்ள தோழிக்கு,

நான் நலம். அது போல் நீயும் உன் பெற்றோரும் நலமாக இருப்பீர்கள் என நம்புகிறேன். இவ்வாண்டு 20-11-25 அன்று வருகின்ற என் பிறந்த நாளை நாங்கள் சிறப்பாகக் கொண்டாட எண்ணியுள்ளோம். அதனால் நீயும் என் பிறந்தநாள் விழாவில் கலந்துக் கொள்ள வரும்படி அன்புடன் அழைக்கின்றேன்.

இப்படிக்கு
உன் அன்புத் தோழி
ப. உமா

உறைமேல் முகவரி:

பெறுநர்;
ம. பவித்ரா
த/பெ. மணி,
13, முல்லை நகர்,
மதுரை - 13